[1979 மார்ச் 3

கீழக்கடையம் குடிநீர்த் திட்டம்.

* வினா எண் 208—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் உள்ள கீழக்கடையம் குடிநீர் திட்ட வேலைகளுக்கென மதிப்பீடு என்ன ?

(ஆ) இத்திட்டத்திற்கு அரசு மான்யம் உண்டா ?

(இ) பயன்பெறும் கிராமங்களின் பெயர்கள் அவற்றின் ஜனத்தொகையும் என்ன ?

(ஈ) இத்திட்டத்தை பக்கத்திலுள்ள கிராமங்களுக்கும் விஸ்தரிக்குமாறு சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் கோரியுள்ளனவா ?

(உ) ஆம் எனில், அரசின் முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ரூ. 2,50,000

(ஆ) ஆம்.

(இ) இத்திட்டத்தினல் பயன் பெறும் கிராமங்கள் அவற்றின் மக்கட்தொகை விவரங்கள் பின்வருமாறு : —

	கிராமத்தின் பெயர்.	மக்கள் தொகை.
1	கல்யாணிபுரம்	440
2	பலவனூர்	1,665
3	கீழக்கடயம்	2,804
4	அங்கப்பாபுரம்	136
5	நரயப்பாபுரம்	369
6	செக்கடியூர்	384
7	சேர்வைக்காரன்பட்டி	743

(ஈ) ஆம்.

(உ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: இந்தத் திட்டத்தில் அதிகப்படியான அளவு தண்ணீர் தேக்க கெபாசிடி இருக்கிறது என்பதைப் பற்றி அரசு அறியுமா? அதன் அடிப்படையில் அந்த வட்டாரத்திலுள்ள பஞ்சாயத்துத் தலைவர்கள் விஸ்தரிக்குமாறு கேட்டிருக்கிறார்களா? இந்தத் திட்டத்தைச் சீக்கிரமாக அமல் நடத்த அரசு முன்வருமா?

1979 மார்ச் 3]

(முற்பகல் 10.30)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் நீர் ஆதாரம் ஜம்பு நதிக் கரையில் உள்ள திறந்த கிணறு ஆகும். இக்கிணற்றில் கிடைக்கும் குறைந்த ஊற்றைப் பயன்படுத்தி அதிகபட்சம் மக்கள் பயன் பெற வேண்டும் என்ற அடிப்படையில் சமீபத்தில் மாற்றுத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கடயம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கீழ்க்கண்ட கிராமங்கள் சேர்க்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

1 காட்டேரிப்பட்டி

2 கேளையாபிள்ளையூர்

3 அருணாசலம்பட்டி

4 மயிராலனூர்

5 புறங்காட்டுப் புலியூர்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கடயம் ஒன்றியத்தில் இந்த 12 கிராமங்களுக்கும் சேர்ந்து ரூ. 6.21 லட்சங்கள் செலவில் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கென ஒரு திருத்தப்பட்ட உத்தேச மதிப்பீட்டைத் தயார் செய்து அரசின் ஒப்புதலுக்காக வும், இத்தொகையை மான்யமாக வழங்குமாறும் கேட்டு அனுப்பியுள்ளது. இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் இருந்த போதிலும் இக்குடிநீர் திட்டம் மேற்கண்ட 12 கிராமங்களும் விரிவாக்கப்பட்டு எல்லாப் பணிகளும் முடிக்கப்பட்டு விட்டதாக வாரியம் தெரிவித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகளும் பதில்களும் சுருக்கமாக இருக்க வேண்டுமென்பது மாண்புமிகு உறுப்பினர் களுக்கும் தெரியும், அமைச்சர்களுக்கும் தெரியும். கேள்விக்கு பதில் நீண்டதாக இருந்தால் அதை அறிக்கையாக அச்சிட்டு மேசைமீது வைத்திருந்தால் உறுப்பினர்களுக்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, நான் கேட்க வேண்டியதைத் தாங்களே சொல்லி விட்டீர்கள். நன்றி. எழுத்துப் பூர்வமாகக் கொடுத்திருந்தால் நாங்கள் கேள்விகள் கேட்பதற்கு வாய்ப்பாக இருக்கும். வெக்காலிப்பட்டி கடையம் பெரும்பத்து பஞ்சாயத்துக்கூட அதை யொட்டித்தான் இருக்கிறது. அந்தத் திட்டத்திலே அதையும் சேர்க்க வேண்டுமென்று அந்தப் பஞ்சாயத்து ஒரு கோரிக்கையை அனுப்பியிருக்கிறது. ஆகவே அதையும் சேர்த்துக்கொள்ள அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இப்போது சொன்னதற்கு மேல் வேறு கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுத்தால் தண்ணீர் கொடுப்பதாக உத்தேசிக்கப்பட்டுள்ள கிராமங்களுக்கும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு விடும்.

சேரன் போக்குவரத்துக் கழகத் தோழிலாளர்களுக்கு வீடுகள்.

* வினா எண் 209—திரு. கு. ரமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவையில் சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க திட்டமுள்ளதா ?

(ஆ) ஏற்கனவே கட்டப்பட்டுள்ள வீடுகள் எவ்வளவு ? ஒவ்வொரு வீட்டுக்கும் தொழிலாளிகளிடம் பெற்ற தொகை எவ்வளவு ?

(இ) அதிகாரிகளுக்கு கட்டப்பட்டுள்ள பங்களாக்கள் எத்தனை ? அவற்றின் மதிப்பென்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) சேரன் போக்குவரத்துக்கழகத் தொழிலாளர்களுக்காக சேரன் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் மூலமாக, கோவையிலும், பொள்ளாச்சியிலும் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாக ஈரோடு, திருப்பூர் போன்ற இடங்களில் வீடுகள் கட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ஆ) கட்டி முடிக்கப்பட்டுள்ள வீடுகள் பற்றிய விபரம் :

இடம்.	டைப்.	எண்ணிக்கை.	வீட்டின் மதிப்பு.	காலி மனைக்கு வசூலிக்கப் பட்ட முன் பணம்.
கோவை	'ஏ'	14	ரூ. 33,000	ரூ. 2,850
கோவை	'பி'	23	ரூ. 19,000	ரூ. 2,000
கோவை	'சி'	105	ரூ. 10,000	ரூ. 1,150
பொள்ளாச்சி	'பி'	10	ரூ. 19,000	ரூ. 1,100
பொள்ளாச்சி	'சி'	152	ரூ. 10,000	ரூ. 650